**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரமத்தி</u>**

முன்னிலை: திரு.J.கண்ணன், M.A., B.L., D.L.T.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், பரமத்தி

2023 ஆம் ஆண்டு டிம்பர் 01 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**MP.No.02/2023**

**in STC.No.1027/2022**

**<u>CNR.No.TNNM0D0065112022</u>**

வசந்தகுமாரி – மனுதாரர்/எதிரி

/எதிராக/

சண்முகசுந்தரம் – எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது என் முன்பாக 24.11.2023 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.க.மதன்ராஜ் M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஷேக்தாவுத் M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், மனு, எதிருரை, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் இன்று பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது பிரிவு 311 குற்ற விசாரணை முறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம் :**

இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி மீது எதிர்மனுதாரர்/புகார்தாரர் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது இவ்வழக்கானது விசாரணை நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்/புகார்தாரர், மனுதாரர்/எதிரி மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புவரை பார்த்ததில்லை. எதிர்மனுதாரர்/புகார்தாரரின் குறுக்கு விசாரணையின் போது குறிப்பிட்ட மயில்வாகணம் என்பவரையும் மனுதாரர்/எதிரி பார்த்ததில்லை. எதிர்மனுதாரர்/புகார்தாரரின் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் மனுதாரர்/எதிரி எவ்வாறு யார் மூலமாக அறிமுகமானார் என்று குறிப்பிடாத போது குறுக்கு விசாரணையில் மயில்வாகணம் என்பவர் வீட்டில் மூன்று முறை பார்த்ததாகவும், கடன் கொடுத்ததாக எதிர்மனுதாரர்/புகார்தாரர் குறிப்பிட்ட தேதிக்கு முன்பு மனுதாரர்/எதிரியும், மயில்வாகணமும் எதிர்மனுதாரர்/புகார்தாரரின் அலுவலகத்திற்கு வந்ததாக சாட்சியமளித்துள்ளார். எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு மனுதாரர்/எதிரியின் வழக்கு காசோலை சட்ட விரோதமாக எவ்வாறு கிடைத்ததென்று மயில்வாகணம் என்பவரை

விசாரணை செய்தால் மட்டுமே தெரியவரும். குறுக்கு விசாரணையின் போது மயில்வாகணம் என்பவரது கைப்பேசி எண்ணை எதிர்மனுதாரர்/புகார்தாரரிடம் கேட்ட போது தனது மொபைலில் மயில்வாகணம் கைப்பேசி எண் உள்ளது எனக் கூறியதால், மொபைலை பார்த்து சொல்லுமாறு இந்நீதிமன்றம் அனுமதித்தும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் மொபைல் இல்லை என்றும் வேறு ஒரு நபரிடம் உள்ளதாக கூறினார். எதிர்மனுதாரர்/புகார்தாரர் தெரிவித்தவாறு மயில்வாகணம் என்பவரது முகவரி மயில்வாகணம் ரியல் எஸ்டேட் புரோக்கர், மாரியம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர் மற்றும் மயில்வாகணம் ரியல் எஸ்டேட் புரோக்கர், ஸ்டேட் பேங்க் காலனி, தஞ்சாவூர் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி மயில்வாகணம் என்பவரை விசாரணை செய்ய அனுமதிக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிருரையின் சுருக்கம்:**

மேற்படி வழக்கில் மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள இம்மனு பொய்யாகவும் மோசடியுமானது, தள்ளுபடியாக வேண்டியது. மனுதாரர்/எதிரி மனுவில் கூறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானது. இம்மனுவை நிரூபணம் செய்ய மனுதாரர்/எதிரியே கடமைப்பட்டவர் ஆவார். எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ–1 முதல் 6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பில் எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய 23.12.2022ம் தேதியில் மனு தாக்கல் செய்து சி.எம்.பி.6870/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுவானது அன்றையதினமே அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த 17.03.2023ம் தேதியில் எதிர்மனுதாரர்/புகார்தாரரை மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால், PW–1 சாட்சியம் முடிக்கப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பில் எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்து, மனுவானது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்/புகார்தாரரை மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது. வழக்கானது கடந்த 14.07.2023 தேதியில் மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு. 11.08.2023, 01.09.2023, 08.09.2023 மற்றும் 06.10.2023 ஆகிய தேதிகளில் மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா கொடுக்கப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பில் சாட்சியமும் முன்னிலை படுத்தாமல் போனதால் 06.10.2023 தேதியில் மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, 13.10.2023ம் தேதிக்கு வழக்கானது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது வாதுரைக்காக போடப்பட்டுள்ள இந்நிலையில்

இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது.

**மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது இம்மனுவில் தீர்வு காணவேண்டிய சங்கதியாக உள்ளது.**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் புகாரானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142 ன் படி தாக்கல் செய்யப்பட்டதாகும். எதிர்மனுதாரர்/புகார்தாரர் கடந்த 07.10.2022 ம் தேதியன்று முதல் விசாரணை செய்யப்பட்டு ExP1 to ExP6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. கடந்த 09.11.2022 ம் தேதியன்று மனுதாரர்/எதிரி ஆஜரான நிலையில் வழக்கானது முதல் கேள்விக்காக வாய்தா போடப்பட்டது. 07.12.2022 ம் தேதியன்று முதல் கேள்வி கேட்கப்பட்டு எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் சாட்சியத்திற்காக 23.12.2022 ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டது. 23.12.2022 ம் தேதியன்று u/s 145(2) NI Act ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனுவானது CRLMP.NO.6870/2022 ஆக கோப்பிற்கு மனுவானது அன்றைய தினமே அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. மனுதாரர்/எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 20.01.2023, 22.02.2023 ஆகிய தேதிகள் வாய்தா போடப்பட்டது. கடந்த 17.03.2023 ம் தேதியன்று எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் மனுதாரர்/எதிரிக்கு வாய்ப்பு முடிக்கப்பட்டு இவ்வழக்கானது U/Sec.313(i)(b)Cr.P.C ன் கீழ் கேள்வி கேட்பதற்காக வாய்தா போடப்பட்டு. கடந்த 5.04.2023 ம் தேதியன்று U/Sec.313(i)(b)Cr.P.C ன் கீழ் கேள்வி கேட்கப்பட்டு அன்றையதினமே மனுதாரர்/எதிரி தரப்பில் u/s 145(2) NI Act ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனுவானது CRLMP.NO.1694/2023 ஆக கோப்பிற்கு மனுவானது 03.05.2023 ம் தேதியன்று செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. கடந்த 19.05.2023 ம் தேதியன்று எதிர்மனுதாரர்/புகார்தாரரை மனுதாரர்/எதிரி தரப்பில் பகுதியாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டது. கடந்த 23.06.2023 ம் தேதியன்று எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டு எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டது. கடந்த 06.10.2023 ம் தேதியன்று மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் யாரும் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இரு தரப்பு

வாதுரைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்/எதிரி தரப்பில் புகார்தாரரை எதிரிக்கு அறிமுகம் செய்து வைத்த சாட்சி மயில்வாகணம் என்பவரை விசாரணை செய்வதன் மூலம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே அறிமுகம் இல்லை என மனுதாரர்/எதிரி அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மேற்படி சாட்சியை விசாரணை செய்ய வேண்டும் என கோரி உள்ளார். மனுதாரர்/எதிரி அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மற்றொரு வாய்ப்பு மனுதாரருக்கு கொடுக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனுவை அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2023 டிசம்பர் 01 நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J KANNAN

Digitally signed by J KANNAN
Date: 2023.12.01 18:39:10 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பரமத்தி.